අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk


| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My Ref. | ED/02/29/02/02/07(II) | ඔබේ අංකය / உமது இல. / Your Ref. | |
| දිනය / திகதி / Date | 2022.01. | | |

**TAMIL TRANSLATION**

சுற்றுநிருப இலக்கம் : 2022/01

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

<u>இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பு திருத்தம் செய்தல் - திருத்தம் இலக்கம் 02 அமுல்படுத்துதல்.</u>

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2014.10.23 ஆம் திகதிய 1885/38ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பு 2021.11.24 திகதிய இலக்கம் 2255/14 எனும் இலக்க அதி விசேட வர்த்தமானியினால் இரண்டாவது தடவையாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

02. அதன்படி 2021.11.24 ஆம் திகதிய இலக்கம் 2255/14 எனும் இலக்கமுடைய வர்த்தமானி அறிவித்தலின் பிரதி ஒன்று இத்துடன் அனுப்பப்பட்டுள்ளதுடன் அதில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை உடனடியாக அமுல்படுத்துமாறு அறியத்தருகின்றேன்.

பேராசியர் கே. கபில சீ.கே. பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதி:

1. செயலாளர், அரச சேவைகள் ஆணைக்குழு - த.அ.கொ
2. சகல மாகாண பிரதான செயலாளர்கள் - த.அ.கொ
3. சகல மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள் - த.அ.கொ

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ අதிவிசேஷமானது

අංක 2255/14 – 2021 නොවැම්බර් 24 වැනි බදාදා – 2021.11.24

**2255/14 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பை திருத்தியமைத்தல் - திருத்த இலக்கம் 02**

பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/38 ஆம் இலக்க மற்றும் 2014, ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

பேராசிரியர் கே.கபில சீ.கே.பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2021, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி.

பகுதி I

திருத்த இலக்கம் 01 - 2019 ஏப்பிறல் மாதம் 22 ஆம் திகதிய மற்றும் 2120/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்

**பகுதி II**

*13.14*

'பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா' எனக் கருதப்படுவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மூலம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்படும் கல்வி விடயம் தொடர்பான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா

அல்லது

பின்வரும் விடயத்துறைகளுடன் தொடர்புடைய பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா

I. கொழும்பு பல்கலைக்கழகத்தின் "நாடகமும் அரங்கியலும்" குறித்த பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா
II. கொழும்பு பல்கலைக்கழகத்தின் "Teaching of English as a Second Language" குறித்த பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா
III. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் "Special Needs Education" குறித்த பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா
IV. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தினால் (Postgraduate Institute of Science) வழங்கப்படும் விஞ்ஞானக் கல்வி குறித்த பட்டப்பின்படிப்பு பாடநெறி (PGDSE)

அல்லது

தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சு போன்ற நிறுவனங்களிலிருந்து பிரதிநிதியொருவர் வீதம் கொண்ட மூவரடங்கிய கல்விக் குழுவொன்றினால் (Academic Board) பரிந்துரைக்கப்படும் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும், பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமாவிற்கு சமமாகக் கருதப்படும் விடயத்துறைகளுடன் தொடர்புடைய பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா ஆகும்.

*13.15*

"கல்வி பட்டப்பின்படிப்பு" எனக் கருதப்படுவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்படும் கல்வி விடயம் தொடர்பான பட்டப்பின்படிப்பு

அல்லது

தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சு போன்ற நிறுவனங்களிலிருந்து பிரதிநிதியொருவர் வீதம் கொண்ட மூவரடங்கிய கல்விக் குழுவொன்றினால் (Academic Board) பரிந்துரைக்கப்படும் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும், கல்வி பட்டப்பின்படிப்பிற்கு சமமாகக் கருதப்படும் விடயத்துறைகளுடன் தொடர்புடைய பட்டப்பின்படிப்பு ஆகும்.

*12-101*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.